வெளியீடு எண். 299.

# திருஅரிசிற்கரைப்புத்தூர்த் திருப்பதிகங்கள்

210

121





அப்பர்



சுந்தரர்

Ø23:4117x2
N53
59635

தருமபுர ஆதீனம்.

வெளியீடு எண் 299.

உ

குருபாதம்

# திருஅரிசிற்கரைப்புத்தூர்த் திருப்பதிகங்கள்

இது

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
இருபத்தைந்தாவது மகாசந்நிதானம்

**ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

திருவுள்ளத்தின்படி வெளியிடப்பெற்றது.

1953,

உ

குருபாதம்

59635

# முன்னுரை

தருமபுர ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் மாதஜன்மநக்ஷத்திரநாட்களில் திருப்பதிகம்பெற்ற சிவஸ்தலங்களில் ஆதீனச்சார்பில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்துத் தலப்பதிகத்தையும் அச்சிட்டு வழங்கிவருதல் போல, இம்மாதத்திலும் 8—10—53 அன்று திருஅரிசிற்கரைப்புத்தூர் ஸ்ரீ படிக்காசுவைத்தபரமர் ஆலயத்தில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்துத் தலப்பதிகம் அடங்கிய இவ்வெளியீடும் அன்பர்கட்கு வழங்கப்பெறுகின்றது. அன்பர்கள் யாவரும் பாராயணஞ்செய்து, பெருமான் திருவருளால் எல்லா நலன்களும் பெற்று உய்வார்களாக.

# தலச்சிறப்பு

இத்தலம் காவிரித்தென்பால் சோழவளநாட்டின் அறுபத்தாறுவது திருத்தலம். அரிசிலாற்றின் தென் கரையிடத்து அழகுடன் திகழ்கின்ற புத்தூர்; ஆதலின் அரிசிற்கரைப்புத்தூர், அழகார்புத்தூர் என்னும் திருநாமங்களுடன் திகழ்கின்றது. புகழ்த்துணைநாயனார் பூசித்து வழிபட்ட சிறப்பினது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி ஆகிய மூவர்களாலும் பாடப்பெற்றது.

**புகழ்த்துணை நாயனார்:** இவர் ஆதிசைவ அந்தணர் அகத்தடிமைசெய்து விதிப்படி பரமனைப்பூசித்து வழி படும் நியதியர். உலகின்கண் பஞ்சமுண்டாகி உணவுப் பொருள்கள் அருகிட, பட்டினியால் உடல்தளர்ந்து இளைப்புற்றனர். அக்காலத்தும் அன்புதளராது அரிசி லாற்றின் நீர்கொணர்ந்து திருமஞ்சனமாட்டும்பொழுது கைசோர்ந்து திருமஞ்சனக்குடம் இறைவன் திருமுடிமீது விழ நடுக்குற்றனர். இறைவன் அருளால் நித்திரை எய்தினர். கனவிலே தோன்றிய சிவனார் அருள்வழி பீடத்திற் கிடைத்திடும் பொற்காசொன்றினைப் பஞ்சம் நீங்கும்வரை கைவரப்பெற்றனர். சோர்வு நீங்கினர். அன்புமிக்கு மெய்யடிமைசெய்து இறைவற்குப் பூசனை

புரிந்து வழிபட்டுத் திருவடி அடைந்தனர். இவ்வரலாற்றினை, திருப்பதிகம் மூன்றும் முறையே 7, 9, 6 பாடல்களில் சிறப்பாகவும் குறிப்பாகவும் போற்றுகின்றது.

**ஆலயம்:** நாற்புறங்களும் வயல்கள் சூழ்ந்த நீர்வளம் செறிந்தது. செங்கற்பணியாலானது. அழகிய கருப்பகிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபத்தொடும் திகழ்வது. விசாலமாகிய பிராகாரங்களுடன் சிறுகோபுரத் திருவாயிலொடு மேற்குநோக்கித் திகழ்கிறது.

**மூர்த்திகள்:** கோபுரத்திருவாயிலின் உட்புறம் வடக்கில் சூரியன்; தெற்கில் சந்திரன்; பிராகாரம் வடமேற்கில் கஜலக்ஷ்மி, மயில்மேல் ஆறுமுகன்; தென்மேற்கில்

விநாயகர், திருமுன்நந்தி விநாயகர், பலிபீடம், துவஜஸ் தம்பம்; வடகிழக்கில் சண்டேசர், பைரவர், புகழ்த்துணை நாயனாருக்குப்படிக்காசுக் கு நாடொறும்உணவுப்பொருள் கள் கொடுத்து ஆதரித்த செட்டியார் தனது மனைவி யுடன், நவக்கிரகமூர்த்திகள்; தென்கிழக்கில் திருமடைப் பள்ளி; தெற்கில் யோகதக்ஷிணாமூர்த்தியும் உள்ளனர். இறைவன் படிக்காசுவைத்தபரமர். இவர் புகழ்த்துணை நாயனார் கைதவறி விழுத்திட்ட குடம்பட்ட தழும்பு பின்புறம் திருமுடியில் திகழ்கின்ற அழகிய இலிங்கத் திருவுருவினர். இறைவி அழகம்மை. தெற்குநோக்கி உள்ளார். மகாமண்டபத்தில் சமயாசாரியரும், மனைவி யுடன் புகழ்த்துணை நாயனாரும், நால்வரில் சுந்தரர்

பரவையாரும், விசுவநாதர் விசாலாக்ஷியும், நடராஜர், சோமாஸ்கந்தர், அம்பிகை, சுப்பிரமண்யர், விநாயகர், சண்டேசர், அஸ்திரதேவர் முதலிய விழாமூர்த்திகளும் உள்ளனர்.

தீர்த்தம்: வடபக்கம் உள்ளது. அரிசில்நதியும் 6 பர்லாங்கு அளவில் ஓடுகிறது. இத்தலம் கும்பகோணம் புகைவண்டி நிலையத்திலிருந்து தென்கிழக்கே நாச்சியார் கோயில் கற்பாதையில் பஸ்மார்க்கத்தில் உள்ளது.

---

குருபாதம்

# திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பதிகம்

பண்—காந்தாரம்

இராகம் — நவரோஸ்] [தாளம் — ஆதி

திருச்சிற்றம்பலம்

மின்னுஞ் சடைமே லிளவெண் டிங்கள் விளங்கவே
துன்னுங் கடனஞ் சிருடோய் கண்டர் தொன்மூதூர்
அன்னம் படியும் புனலா ரரிசி லலைகொண்டு
பொன்னும் மணியும் பொருதென் கரைமேற் புத்தூரே. 1

**1.** அன்னங்கள் படிகின்ற அரிசிலாற்றின் நீர் தனது அலைக்கரங்களாலே பொன்னொடு மணிகளையும்

கொண்டு மோதிடுகின்ற அழகிய நீர்வளமிக்க, அரிசிற் கரைப்புத்தூர்; இது மின்னொத்த சடைமீது வெள்ளிய சந்திரன் திகழ்ந்திட, இருளொாத்த நஞ்சானது கழுத்திலே பொருந்திட வைத்தருளிய எம்பெருமானரது பழமையான ஊராகும்.

மேவா வசுரர் மேவெயில் வேவ மலைவில்லால்
ஏவா ரெரிவெங் கணையா லெய்தா னெய்துமூர்
நாவா ணுதை ணமை மோதி நாடோறும்
பூவா னீராற் பூசுரர் போற்றும் புத்தூரே. 2

2. நாவினாலே நாதன் நாமம் அஞ்செழுத்தோதி நாள் தோறும் பூவாலும், நீராலும் பூசித்துப் போற்றுகின்ற அந்தணாளர்கள் மல்கிய புத்தூர் தனைவந்து அடையாத

அசுரர்களது, மூப்புரங்களைத் தீயில் வெந்துபட மலை வில்லால், தீப்பொருந்திய அம்பினால் எய்தருளினேனது இடமாகும்.

பல்லார் தலைசேர் மாலை சூடிப் பாம்பும்பூண்
டெல்லா விடமும் வெண்ணீ றணிந்தோ ரேறேறிக்
கல்லார் மங்கை பங்க ரேனுங் காணுங்கால்
பொல்லா ரல்ல ரழகிய புத்தூர்ப் புனிதரே. 3

**3.** தலைமாலை யணிந்த சென்னியனாய், பாம்பினைப் பூண்டோனாய், மேனிமுழுதும் வெண்ணீறணிந்தோனாய், மலைமங்கை பாகத்தனாய், இடபமூகந்தேறியவனாகி, வருகின்ற கோலத்தைக் காணுமிடத்து (காண்பார்களுக்குப் பாம்போடு, எலும்பு, தலைமாலை யணிந்த பொல்லாத

கோலத்தினனுயினும்) பொல்லாதவரல்லர், அழகியரே. அவர் புத்தூரிடங்கொண்டுமேவிய புனிதரேயாவார்.

வரியேர் வளையா ளரிவை யஞ்ச வருகின்ற
கரியே ருரிவை போர்த்த கடவுள் கருதுமூர்
அரியேர் கழனிப் பழனஞ் சூழ்ந்தங் கழகாய
பொரியேர் புன்கு சொரிபூஞ் சோலைப் புத்தூரே. 4

4. வயல்கள் சூழ்ந்து அழகு மிக, பொரியையொப்ப, புன்னைமரங்கள் பூக்களைச் சொரிந்து அழகு செய்கின்ற சோலைவளம் மிக்க இப்புத்தூரே, வளையணிந்த உமையம்மையார் அஞ்சும்படிவந்த யானையையுரித்துப்போர்த்த கடவுள் வாழுமிடமாகும்.

என்போ டரவ மேனத் தெயிறோ டெழிலாமை
மின்போற் புரிநூல் விரவிப் பூண்ட மணிமார்பர்
அன்போ டுருகு மடியார்க் கன்ப ரமருமூர்
பொன்போ தலர்கோங் கோங்கு சோலைப் புத்தூரே. 5

**5.** பொன்போல மலர்ந்து இகழ்கின்ற, கோங்க மரச் சோலைகள் மல்கிய இப்புத்தூரே, எலும்பு பாம்பு பன்றிக்கொம்பு ஆமை இவைகளை மின்போலும் இகழ்கின்ற திருமார்பில் பூணுநூலோடு விரவிப் பொருந்திட அணிந்த சிவன்—அன்போடு உருகிப் போற்றுகின்ற அடியவர்களுக்கு அன்பன்—அமர்ந்தருளுகின்ற ஊராகும்.

வள்ளி முலைதோய் குமரன் றாதை வான்றோயும்
வெள்ளி மலைபோல் விடையொன் றுடையான் மேவுமூர்
தெள்ளி வருநீ ரரிசிற் றென்பாற் சிறைவண்டும்
புள்ளு மலிபூம் பொய்கை சூழ்ந்த புத்தூரே. 6

6. தெள்ளியதாகிவருகின்ற நீர்நிறைந்த அரிசிலாற்றின் தென்பால் அழகியவண்டுகளோடு பறவைகள் மல்கிய சோலைகளோடு பொய்கைகள் சூழ்ந்து அழகுதிகழத் திகழ்கின்ற இப்புத்தூரே வெள்ளிமலையன்ன விடையுடையான் வள்ளிமுலைதோயும் குமரன் தந்தை எம்பெருமான் மேவி அருளுகின்ற தலமாகும்.

நிலந்த ணீரோ டனல்கால் விசும்பி னீர்மையான்
சிலந்தி செங்கட் சோழ னாகச் செய்தானூர்
அலந்த வடியா னற்றைக் கன்றோர் காசெய்திப்
புலர்ந்த காலை மாலை போற்றும் புத்தூரே. 7

7. வாடிய அடியவர் புகழ்த்துணைநாயனார் அன்றைக் கன்றைக்கு ஒரு பொற்காசினையடைந்து வாட்டம் நீங்கிக்

காலையும் மாலையும் போற்றி வழிபாடுபுரிந்திட்ட பெருமை சான்ற இப்புத்தூரே; நிலம், நீர், தீ, காற்று வான் யாவும், தானேயாய தன்மையன்—முன்னாட் பணிசெய்த சிலந்தி யினைக் கோச்செங்கட்சோழனாகச் செய்தருளிய அருளாளன்—சிவன் அவனது இடமாகும்.

இத்தேரேக விம்மலை பேர்ப்ப னென்றேந்தும்
பத்தோர் வாயான் வரைக்கீ ழலறப் பாதந்தான்
வைத்தா ரருள்செய் வரதன் மருவும் மூரான
புத்தூர் காணப் புகுவார் வினைகள் போகுமே. 8

8. இத்தேரினை விரைந்து செல்லவிடுப்பேன் இக் கயிலைமலையினைப் பெயர்த்தெடுப்பேன் என்று தனது புயங் களால் ஏந்திய வாய்கள் பத்துடைய இராவணனை

அவ்வரையின்கீழ் அலறும்படியாகத் திருவடித்திருவிரல் ஒன்றினை ஊன்றினேன், பின் அருளையும் புரிந்தருளிய வரதன்—எம்பெருமான் மருவிய தலமாகிய இப்புத்தூரினைக் கண்டு தரிசிக்கப்புகுவார்களது வினைகள் நீங்கும்.

முள்ளார் கமலத் தயன்மான் முடியோ டடிதேட
ஒள்ளா ரெரியா யுணர்தற் கரியா னூர்போலும்
கள்ளார் நெய்தல் கழுநீ ராம்பல் கமலங்கள்
புள்ளார் பொய்கைப் பூப்பல தோன்றும் புத்தூரே. 9

9. பறவைகள் சூழ்ந்து பொருந்தித் திகழ்கின்ற பொய்கைகளிடத்து தேன்நிறைந்து பொருந்திய நெய்தல் செங்கழுநீர், அல்லி, தாமரை ஆகிய பூக்கள் பல மலர்ந்து காட்சியதாகித் திகழ்கின்ற வளம்செறிந்த இப்புத்தூரே,

மாலொடு பிரமன் அடியோடு முடிதேட அன்று அவர்கள் உணர்தற்கரியனாய் எரியாகிநின்ற ஒருவனது ஊர் போலும்.

கையார் சோறு கவர்குண் டர்களுந் துவருண்ட
மெய்யார் போர்வை மண்டையர் சொல்லு மெய்யல்ல
பொய்யா மொழியா லந்தணர் போற்றும் புத்தூரில்
ஐயா வென்பார்க் கையுற வின்றி யழகாமே. 10

10. துவராடை போர்த்த மண்டையர்கள் கையிடு சோறு கவர் குண்டர்கள் ஆகிய தேரர், சமணர் இவர்களது சொற்கள் மெய்ம்மையல்ல; ஆதலின் என்றும் பொய்யாத மெய்ம்மையதாய வேதம் முதலிய திருமறைகள் மொழி கொண்டு அந்தணாளர் போற்றுகின்ற புத்தூரிடங்

கொண்ட ஐயனே என்பார்க்கு நிச்சயமாக அழகாய தோன்று தானேவந்து பொருந்திடும்.

நறவங் கமழ்பூங் காழி ஞான சம்பந்தன்
பொறிகொ ளரவம் பூண்டா ணண்ட புத்தூர்மேல்
செறிவண் டமிழ்செய் மாலை செய்ய வல்லார்கள்
அறவன் கழல்சேர்ந் தன்போ டின்ப மடைவாரே. ||

11. அரவம்பூண்ட பெருமான் ஆண்ட புத்தூரினைப் போற்றி, காழிவந்த ஞானசம்பந்தன் வண்தமிழ் மாலையாகச்செய்த இதனைச் சொல்ல வல்லவர்கள் பெருமான் அடியிணைகளைச் சார்ந்து அன்புடையராகி இன்புற்றுத் திகழ்வர்.

திருச்சிற்றம்பலம்.

உ

குருபாதம்

# திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பதிகம்

## திருக்குறுந்தொகை

இராகம் — நாதநாமக்ரியா] [தாளம் — சாபு

திருச்சிற்றம்பலம்

முத்தூ ரும்புனன் மொய்யரி சிற்கரைப்
புத்தூ ரன்னடி போற்றியென் பாரெலாம்
பொய்த்தூ ரும்புல னைந்தொடு புல்கிய
மைத்தூ ரும்வினை மாற்றவும் வல்லரே. 1

1. முத்துப்போலும் தவழ்கின்ற நீர்நிறைந்த அரிசிற் கரைப்புத்தூர் எம்பெருமானே! அடியிணைகள்போற்றி

என்பார் யாவரும் உடலிலே பொய்மையதாம் வழிமல்கி ஊர்கின்ற புலன்கள் மெய், வாய், கண், மூக்கு, செவி ஐந்தொடும் இருள்போலும் அடர்ந்து பொருந்தி வருத்து கின்ற வினைகளை மாற்றுதற்கு வல்லராவார்.

பிறைக்க ணிச்சடை யெம்பெரு மானென்று
கறைக்க ணித்தவர் கண்டவ ணக்கத்தாய்
உறக்க ணித்துரு காமனத் தார்களைப்
புறக்க ணித்திடும் புத்தூர்ப் புனிதரே. 2

2. திங்கள்மாலையணி திருச்சடை எம்பெருமானே என்றநியமத்தராம் பெரியவர்கள் தங்கள் அநுபவத்திற் கண்ட வணக்கத்திடை உறைவாய் என்றென்று உள்ளத் திரையிலே உருவத்தினை எழுதி உயிர்த்தலின்றியிருந்து

அன்புமிக்கு உருகிடாத கள்ள மனத்தவர்களைப் புறக் கணித்திடுவன். அவன் புத்தூரிடங்கொண்ட புனிதன்.

அரிசி லின்கரை மேலணி யார்தரு
புரிசை நந்திருப் புத்தூர்ப் புனிதனைப்
பரிசொ டும்பர விப்பணி வார்க்கெலாம்
துரிசி னன்னெறி தோன்றிடுங் காண்மினே. 3

3. அரிசில்நதியின் கரைமிசை அழகிய மதில்களாற் சூழ்ந்த புத்தூரிடங்கொண்ட புனிதனை, நல்லதன்மை யொடும் பரவிப் பணிகின்றவரெல்லாம் குற்றமில்லாத மேலாய நல்ல நெறி தோன்றிடப் பெறுவர்.

வேத னைமிகு வீணையின் மேவிய
கீத னைக்கிள ருந்நறுங் கொன்றையம்

போதனைப்புனல் சூழ்ந்தபுத் தூரனை
நாதனை நினைந் தென்மனம் நையுமே, 4

4. வேதன்; வீணையிற்பொருந்திய கீதத்தினன்; நல்ல கொன்றைமலர் மாலையன்; புத்தூரிடங்கொண்ட நாதன் அவனை நினைந்தே என்மனம் நையும்.

அருப்புப் போன்முலை யாரல்லல் வாழ்க்கைமேல்
விருப்புச் சேர்நிலை விட்டுநல் லிட்டமாய்த்
திருப்புத் தூரனைச் சிந்தைசெ யச்செயக்
கருப்புச் சாற்றிலு மண்ணிக்குங் காண்மினே. 5

5. அரும்பொத்த மென்முலை மாதரார்களோடும் பொருந்துகின்ற அல்லல்மிக்க வாழ்க்கைமீது விருப்புற்றுச் சேர்கின்ற நிலைவிட்டு, திருப்புத்தூரினைச் சேர்கின்ற நல்ல

அன்புடையராகி சிந்தனை புரியப்புரியப் புத்தூர்ச்சிவன் நமக்குக் கருப்பஞ்சாற்றினும் இனியனாகி நின்றருள்வன் காண்மின்.

பாம்பொ டுமதி யும்படர் புன்சடைப்
பூம்பு னலும் பொதிந்தபுத் தூருளான்
நாம்ப ணிந்தடி போற்றிட நாடொறும்
சாம்ப லென்பு தனக்கணி யாகுமே. 6

6. கங்கையும், மதியும், பாம்பும் பொதிந்த படர் சடைப் பரமன்; சாம்பரொடு எலும்பினைத் தனக்கு அணியாகக்கொண்டோன்; நாள்தொறும் நாம் பணிந்து அடி போற்றி நலம்பெற இப்புத்தூரினை இடமாகக்கொண்டு இருந்தருள்கின்றனன்.

கனலங் கைதனி லேந்திவெங் காட்டிடை
அனலங் கெய்திநின் றுடுவர் பாடுவர்
பினலஞ் செஞ்சடை மேற்பிறை யுந்தரு
புனலுஞ் சூடுவர் போலும்புத் தூரரே. 7

7. அங்கையில் அனலேந்திக் காட்டிடை எய்தித் தீயில் நின்று ஆடுவர்; பாடுவர்; சிவந்த சடைமீது பிறையோடு கங்கைநீரினையுஞ் சூடுவர்; அவர் திருப்புத்தூரிடங் கொண்ட எம்பெருமானே.

காற்றி னுங்கடி தாகி நடப்பதோர்
ஏற்றி னும்மிசைந் தேறுவ ரென்பொடு
நீற்றி னையணி வர்நினை வாய்த்தமைப்
போற்றி யென்பவர்க் கன்பர்புத் தூரரே. 8

8. காற்றினுங் கடிய நடையுடை எருதினை உகந்தேறுவர்; எலும்பொடு திருநீற்றினை யணிவர்; தம்மை மறவாத நினைவுடையராகி, போற்றி என்று பணிகின்ற அன்பர்கட்கு அன்பர்; அவர் புத்தூரிடங்கொண்ட சிவனாரே.

முன்னு முப்புரஞ் செற்றன ராயினும்
அன்ன மொப்ப ரலந்தடைந் தார்க்கெலாம்
மின்னு மொப்பர் விரிசடை மேனிசெம்
பொன்னு மொப்பர்புத் தூரெம் புனிதரே. 9

9. செம்பொன்னொத்த சடையொடு மேனியர்; முன்னாள் முப்புரங்களை அழித்தனராயினும் அன்னம் ஒத்த தூய அறவடிவினர்; வாடி அலந்து தன்னைச் சரணென்று

அடைந்தவர்க்கெல்லாம் மின்னொளைத்துத் தோன்றி யருளு இன்ற ஒளிவடிவினர்; அவர் புத்தூரிடங்கொண்ட எமது புனிதரே.

செருத்த னுற்றன தேர்செல வுய்த்திடும்
கருத்த னுய்க்கயி லையெடுத் தானுடல்
பருத்த தோள்கெடப் பாதத் தொருவிரல்
அழுந்தி னார்பொழி லார்ந்தபுத் தூரரே.

10. கயிலையைப் பெயர்த்தெடுக்கின்ற கருத்துடைய னாகி, தேரினைச் செலுத்தும்படி செலுத்திட்ட இராவணனது பருத்த உடலோடு தோள்கள் அழிந்திடத் தம்பாதத்து ஒரு விரல்தனை ஊன்றியருளினோன்; அவன், பொழில்வளம் செறிந்த புத்தூரிடங்கொண்ட எம்பெருமானே.

59635

திருச்சிற்றம்பலம்.

உ

குருபாதம்

# சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகம்

பண் – இந்தளம்.

இராகம் – நாதநாமக்கிரியா ] [ தாளம் – ஆதி

திருச்சிற்றம்பலம்

மலைக்கு மகள் அஞ்ச மதகரியை
உரித்தீர் எரித்தீர் வருமுப் புரங்கள்
சிலைக்குங் கொலைச்சே உகந்தேற் றொழியீர்
சில்பலிக்(கு) இல்கடொறுஞ் செலவொழியீர்

கலைக்கொம் புங்கரி மருப்பும் இடறிக்
கலவம் மயிற்பீ லியுங்கா ரகிலும்
அலைக்கும் புனல்சே ரரிசிற் றென்கரை
யழகார் திருப்புத்தூ ரழக னீரே. 1

1. உமையவள் அஞ்சிட யானையை உரித்தீர், முப்புரங்களை எரித்தீர், மனைகள்தோறுஞ் சென்று பலியேற்பதனையும், எருதுகந்து ஏறுதலையும் ஒழிகில்லீர், நீரே, மரின்கொம்பு, யானைத்தந்தம், மயிற்றோகை, அகில், இவைகளை அலைத்துக் கொடுவந்து சேர்க்கின்ற நீர்நிறைந்த அரிசில் நதியின் தென்கரையிடத்து அழகொடும் அமைந்த திருப்புத்தூரிடங்கொண்டு மேவி அழகனாகி நின்றருளினீர்.

அருமலரோன்சிர மொன்றறுத் தீர்செறுத்
தீர்அழல்சூ லத்தில் அந்தகனைத்

திருமகள் கோன்நெடு மால்பல நாள்சிறப்
பாகிய பூசனைசெய் பொழுதில்
ஒருமல ராயிரத் திற்குறை வால்நிறை
வாகவொர் கண்மலர் சூட்டலுமே
பொருவிற லாழி புரிந்தளித் தீர்பொழி
லார்திருப் புத்தூர்ப் புனித னீரே. 2

2. பிரமனது தலை ஒன்றினை அறுத்தீர், சூலத்தால் அந்தகாசுரனை அழித்தீர், திருமகள் மணாளன் திருமால் பூசனைபுரியும்பொழுது பூசனைக்குரிய ஆயிரந் தாமரைமலர்களில், குறைந்திட்ட ஒன்று நிறைவாகத் தனது கண் மலர் இடந்து அடிமலரிற்சூட்டலுமே அவர்க்கு வலிமை மிக்க சக்கரத்தினை அருள்புரிந்தீர், பொழில்சூழ் புத்தூரிடங்கொண்ட புனிதன் நீரே.

தரிக்குந் தரைநீர் தழல்காற்(று) அந்தரஞ்
சந்திரன் சவிதா இயமான னானீர்
சரிக்கும் பலிக்குத் தலைஅங்கை யேந்தித்
தையலார் பெய்யக் கொள்வது தக்கதன்றால்
முரிக்குந் தளிர்ச்சந் தனத்தோடு வேயு
முழங்குந் திரைக்கைக ளால்வாரி மோதி
அரிக்கும் புனல்சே ரரிசிற் றென்கரை
அழகார் திருப்புத்தூ ரழக னீரே. 3

3. சந்தன மரங்களோடு மூங்கில்களையும், முழங்குகின்ற அலைக்கரங்களால், வாரிமோதி, வீசுகின்ற நீர் நிறைந்த அரிசிலின் தென்கரையினிடத்து, அழகொடும் அமைந்த புத்தூரிடங்கொண்டு மேவிய அழகனாய நீரே, மண், நீர், தீ, காற்று, வான், சந்திரன், சூரியன், இயமானன், ஆய அட்டமூர்த்தியாகினீர், தலையோட்டினை

*அழகிய கையினிடத்துப் பாத்திரமாகத் தாங்கிப் பிச்சை யிடுக எனச்சென்று மாதரார்கள் இடுகின்ற பிச்சையினைக் கொள்ளுவது தக்கதொரு செயலன்று.*

கொடியுடை மும்மதில் வெந்தழியக் குன்றம்
　　வில்லா நாணியிற் கோலொன் றினால்
இடிபட எய்தெரித்தீர் இமைக்கும் அளவில்
　　உமக்கா ரெதிரெம் பெருமான்
கடிபடு பூங்கணை யான்கருப் புச்சிலைக்
　　காமனை வேவக் கடைக்கண்ணினால்
பொடிபட நோக்கிய தென்னை கொல்லோ
　　பொழிலார் திருப்புத்தூர்ப் புனித னீரே. 4

*4. வாசுகியை நாணாகக்கொண்ட மலைவில்லிற்பொருந் திய அம்பு ஒன்றினை எய்து கொடிகளைத்தாங்கிய முப்புரங்*

கள் வெந்திடிந்தழிந்திட நொடியளவில் எரித்தருளினீர் உமக்கெதிராவார் யாவர்? எவருமிலர்; அங்ஙனமிருப்ப எம்பெருமானே! திருப்புத்தூர்மேவி இடங்கொண்ட புனிதனாய நீவீர், கரும்பினை வில்லாகக்கொண்டு பூவினை அம்பாகக்கொண்ட காமனைக் கடைக்கண்ணினாலே வெந்து பொடிபடும்படி நோக்கிய காரணந்தான் என்னையோ?

வணங்கித் தொழுவா ரவர்மால் பிரமன்
மற்றும் வானவர் தானவர் மாமுனிவர்
உணங்கல் தலையில் பலிகொண்ட லென்னே
உலகங்க ளெல்லா முடையீர் உரையீர்
இணங்கிக் கயல்சே லிளவாளை பாய
இனக்கெண்டை துள்ளக்கண் டிருந்த அன்னம்
அணங்கிக் குணங்கொ ளரிசிற் றென்கரை
யழகார் திருபபுத்தூ ரழக னீரே. 5

5. வாளைகள் பாய்ந்திட, கெண்டையினங்கள் துள்ளிடக் கண்டிருந்த அன்னப்பறவை குணத்தொடும் அணங்கி வீற்றிருக்கின்ற மலர்களொடு நீர்செறிந்து வள மிக்க அரிசிலின் தென்கரையிடத்து, அழகொடுமமைந்த புத்தூரிடங்கொண்ட அழகன் எம்பெருமானே! உலகங்கள் எல்லாவற்றையும் உமக்கே உடையீர்! மாலொடு பிரமன் மற்றும் வானவர் அசுரர் மாமுனிவர்கள் யாவரும் உம்மை வணங்கித் தொழுது போற்றுகின்றனர். அத்தகைய பெருமைவாய்ந்த நீர் வாடிய தலையோட்டினை கையில் தாங்கி ஊர்கள்தொறும் சென்று பலியேற்றல் என்னை? சொல்வீராக.

அகத்தடி மைசெய்யும் அந்தணன் தான் அரி
சிற்புனல் கொண்(டு) உவந் தாட்டுகின்றான்

மிகத்தளர் வெய்திக் குடத்தையும் நும்முடி
மேல்விழுத் திட்டு நடுங்குதலும்
வகுத்தவ னுக்கு நித்தற் படியும்
வருமென் றொருகா சினைநின் றநன்றிப்
புகழ்த்து ணைகைப் புகச்செய் துகந்தீர்
பொழிலார் திருப்பத்தூர்ப் புனித னீரே. 6

6. அகத்தடிமைசெய்து அரிசில்நீர்கொடுவந்து நாள்தோறும் உமக்கு ஆட்டி அன்பொடு வழிபடும் நியமத்தவர் புகழ்த்துணையார் இளைப்புற்று நீர்க்குடத்தை ஓர்நாள் முடிமீது விழுத்திட்டு நடுக்கமுற்றனர். அப்பொழுது அவரது தளர்வு நீங்கிட நித்தலும் ஒருபடிக்காசு தந்தருளி மகிழ்ந்தீர் திருப்புத்தூரிடங்கொண்ட புனிதனுடைய நீரே.

பழிக்கும் பெருந்தக் கன்எச்சம் மழியப்
பகலோன் முதலாப் பல தேவரையுந்
தெழித்திட்(டு) அவரங் கஞ்சிதைத் தருளுஞ்
செய்கையென்னே கொலோ மைகொள்செம்மிடற்றீர்
விழிக்குந் தழைப்பீ லியொடே லம்உந்தி
விளங்கும் மணிமுத் தொடுபொன் வரன்றி
அழிக்கும் புனல்சே ரரிசிற் றென்கரை
யழகார் திருப்புத்தூ ரழக னீரே. 7

**7.** மயில்தோகை, ஏலம், முத்து, மணி, பொன்களை வாரிவருகின்ற நீர்நிறைந்த அரிசிலின் தென்கரையிடத்துத் திருப்புத்தூரிடங்கொண்ட அழகனுைய நீர் தக்கனது யாகத்தினை அழியச்செய்து அங்குகுழுமியிருந்த சூரியன்முதலாய தேவர்கள் பலரையும் சிதையும்படி செய்தருளிய செயல்தான் என்னே?

பறைக்கண் நெடும்பேய்க் கணம்பாடல் செய்யக்
குறட்பா ரிடங்கள் பறைதாம் முழக்கப்
பிறைக்கொள் சடைதாழப் பெயர்ந்து நட்டம்
பெருங்கா(டு) அரங்காக நின்றாட லென்னே
கறைக்கொள் மணிகண் டமுந்திண் டோள்களுங்
கரங்கள் சிரந்தன்னி லுங்கச்சு மாகப்
பொறிக்கொள்-ளரவம் புனைந்தீர் பலவும்
பொழிலார் திருப்புத்தூர்ப் புனித னீரே. 8

**8.** குளிர்ந்த கண்களையுடைய நிறைந்த பேய்க்கூட்டங்கள் பாடிடக் குறுகிய பூதக்கூட்டங்கள் பறைதனை முழக்கிட, நீலகண்டம் எண்தோள்கள் கரங்கள் சிரம் எங்கணும் பாம்பினைப் புனைந்தவராகி, பிறையணிந்த சடைகள் தாழ்ந்து அசைந்தாடிட, பெருங்காட்டினை இடமாகக்கொண்டு நட்டம் ஆடுகின்ற காரணம் என்னை?

பலாப்பொழில் சூழ்ந்து பொருந்திய புத்தூரிடங்கொண்ட புனிதனுடைய நீரே அருள்வீராக.

மழைக்கண் மடவா ளோர்பா கம்வைத்தீர்
வளர்புன் சடைக்கங்கை யைவைத் துகந்தீர்
முழைக்கொள் அரவோ டென்பணி கலனு
முழுநீறு மெய்பூ சுதலென் னேகொலோ
கழைக்கொள் கரும்புங் கதலிக் கனியுங்
கமுகின் பழுக்காயுங் கவர்ந்து கொண்டிட்
டழைக்கும் புனல்சே ரரிசிற் றென்கரை
யழகார் திருப்புத்தூ ரழக னீரே. 9

9. மூங்கிலொடு கரும்பு பழுத்த பாக்குகளோடு கதலிக்கனிகளையும் கவர்ந்துகொண்டுவந்து கரைதனிலிட்டு யாவரையும் அழைப்பதுபோன்று அலைக்கரங்களோடு

மேலெழுந்து ஓசைசெய்கின்ற நீர்செறிந்த அரிசிலின் தென் கரையிடத்து, திருப்புத்தூரிடங்கொண்ட அழகன் நீவிர், உமையாளைப் பாகத்தேகொண்டு சடையிடத்துக் கங்கையையும் வைத்து மகிழ்ந்தீர்; பின் நீற்றினை மெய்யிற்பூசி பாம்போடு என்பினை அணிகலனாகக்கொண்ட காரணம் தான் என்னையோ?

கடிக்கும் அரவால் மலையா லமரர்
கடலைக் கடைய எழுகாள கூடம்
ஒடிக்கும் உலகங் களையென் றதனை
உமக்கே அமுதாக வுண்டீ ருமிழீர்
இடிக்கும் மழைவீழ்த் திழுத்திட் டருவி
யிருபாலு மோடி யிரைக்குந் திரைக்கை
அடிக்கும் புனல்சே ரரிசிற் றென்கரை
யழகார் திருப்புத்தூ ரழக னீரே. 10

10. மேகங்கள் பொழிந்திட்ட அருவிநீர் இருபாலும் ஓடி அலைகளொடும் மேலெழுந்து அடித்துமோதி ஒலித்திடுகின்ற நீர்செறிந்த அரிசின்மாநதியின் தென்கரையிடத்துத் திருப்புத்தூரிடங்கொண்ட அழகனுகிய நீரே மத்தாகநிறுத்திய மந்திரமலையால், கயிருகச்சுற்றிய பாம்பினைக்கொண்டு அமரர்கள் பாற்கடலைக் கடைந்தபொழுது எழுந்த விஷம் உலகங்களையெல்லாம் அழித்துவிடுமென்று அதனை அமுதமாக ஏற்று உண்டீர் இன்னும் உமிழ்ந்திலீர். என்னே கருணை!

காரூர் மழைபெய் துபொழி யருவிக்
கழையோ டகில்உந் திட்டிரு கரையும்
போரூர் புனல்சே ரரிசிற் றென்கரைப்
பொழிலார் திருப்புத்தூர்ப் புனிதர் தம்மை

ஆரூ ரனருந் தமிழைந் திவைடைந்
தழகா லுரைப்பார் களுங்கேட் பவரும்
சீரூர் தருதே வர்கணங் களொடும்
இணங்கிச் சிவலோ கமதெய் துவரே. 11

11. மூங்கிலோடு அகிலுந்தி இருகரையும் பொருது வருகின்ற நீர்செறிந்த அரிசிலின் தென்கரையிடத்துப் புத்தூரிடங்கொண்டபுனிதனை ஆரூரன் தமிழால் அருளிய இப்பத்தினையும் அழகுபெற உரைப்பாரும் கேட்பாரும் தேவகணங்களொடும் பொருந்தியவராகி, சிவன் உலகத்தினையும் அடைந்திடுவர்.

திருச்சிற்றம்பலம்.

# திருவாசகம்

திருச்சிற்றம்பலம்

நானேயோ தவம்செய்தேன்
சிவாய நமவெனப்பெற்றேன்
தேனாயின் னமுதமுமாய்த்
தித்திக்கும் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம்
புகுந்துஅடியேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை
யொறுத்தன்றே வெறுத்திடவே.

திருச்சிற்றம்பலம்.

# திருவிசைப்பா

திருச்சிற்றம்பலம்

ஏகநாயகனை இமையவர்க் கரசை
யென்னுயிர்க் கமுதினை யெதிரில்
போகநாயகனை புயல்வணற் கருளி
பொன்னெடும் சிவிகையா வூர்ந்த
மேகநாயகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநாயகனை யன்றிமற் றொன்றும்
உண்டென வுணர்கிலேன் யானே.

திருச்சிற்றம்பலம்.

# திருப்பல்லாண்டு

திருச்சிற்றம்பலம்

குழலொலி யாழொலி கூத்தொலி
யேத்தொலி யெங்குங் குழாம்பெருகி
விழவொலி விண்ணளவுஞ் சென்று
விம்மிமிகு திருவாரூரின்
மழவிடையார்க்கு வழிவழியாளாய்
மணஞ்செய் குடிப்பிறந்த
பழவடியாரொடுங் கூடியெம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

திருச்சிற்றம்பலம்.

# பெரியபுராணம்

திருச்சிற்றம்பலம்

புனித னார்முன் புகழ்த்துணையார்க்
கருளுந்திறமும் போற்றிசைத்து
முனிவர் போற்ற எழுந்தருளி
முரிவெள்ளக் கங்கை யினில்
பனிவெண் திங்கள் அணிசடையார்
பதிகள் பலவும் பணிந்து போந்து
இனிய நினைவின் எய்தினார்
இறைவர் திருவா வடுதுறையில்.

59635

திருச்சிற்றம்பலம்.

ஞானசம்பந்தம் பிரஸ்,
தருமபுரம்.

உ

# "ஞானசம்பந்தம்"

## அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சைவசமயச் சார்பாக எழுதப்படும் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவசமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையாவது.

**ஆண்டுக் கையொப்பம் ரூ. 1—8—0.**

செயலாளர்,
"ஞானசம்பந்தம்" காரியாலயம்
தருமபுரம், மாயூரம் P. O.